செய்தி வெளியீடு எண்: 680 நாள் : 17.12.2015

## பத்திரிக்கை செய்தி

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்களின் ஆணைப்படி, கோ–ஆப்டெக்ஸ் நிறுவனத்தில் உள்ள 4 மண்டலங்களில் இயங்கும் கோ–ஆப்டெக்ஸ் விற்பனை நிலையங்களில் விற்பனை உதவியாளர்கள் பணிக்கு 28 பணியாளர்கள் தேர்வு செய்யப்பட்டு, பணியமர்த்தப்பட்டுள்ள விற்பனை உதவியாளர்களுக்கு, "தொடக்கப் பயிற்சி வழங்கும் நிகழ்ச்சி" 17.12.2015 இன்று சென்னை கோ–ஆப்டெக்ஸ் தலைமை அலுவலகத்தில் நடைபெற்றது.

மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் திருமதி எஸ்.கோகுல இந்திரா அவர்கள் பயிற்சி முகாமில் கலந்து கொண்டு பணியாளர்களோடு கலந்துரையாடி, அவர்கள் திறம்பட செயல்பட அறிவுரைகளை வழங்கினார்கள்.

இந்நிகழ்ச்சியில் கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த்துறை அரசு முதன்மைச் செயலாளர் திரு. ஹர்மந்தர் சிங், இ.ஆ.ப., கோ–ஆப்டெக்ஸ் தலைவர் திரு.கே.வி.மனோகரன், கைத்தறி மற்றும் துணிநூல்துறை இயக்குநர் திருமதி.க.லதா, இ.ஆ.ப., கோ–ஆப்டெக்ஸ் மேலாண்மை இயக்குநர் திரு தி.ந.வெங்கடேஷ், இ.ஆ.ப., கோ–ஆப்டெக்ஸ் உபதலைவர் திருமதி. **எஸ்.ஜெயந்தி சோமசுந்தரம்,** மற்றும் கோ–ஆப்டெக்ஸ் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு:**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**